**சமஸ்த லங்கா சாசனாரக்சக மண்டல நிதியம் - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சமஸ்த லங்கா சாசனாரக்சக மண்டல நிதியத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கூற்று, திரண்ட நிதியத்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிதியத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக நிதியத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியுள்ளதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.வளங்கள் சிக்கனமாவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1. கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் எஞ்சியுள்ள கொடிகள், ஸ்டிக்கர்கள் மற்றும் அச்சிடப்பட்ட துணி கொடிகளின் பெறுமதிகள் முறையே ரூபா 326,250, ரூபா 34,750 மற்றும் ரூபா 741,300 ஆக காணப்பட்டதுடன், அந்த பெறுமதி நடைமுறைச் சொத்துக்களாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில் லை. அவ்வாறே, ஆண்டின் இறுதியில் உள்ளபடியான இருப்பு கணிப்பிடப்பட்டிருக்கவில்லை என்பதுடன், அந்த கொடிகள் மற்றும் ஸ்டிக்கர்கள் முறையாக களஞ்சியப்படுத்தப்பட்டிராமை யால் பௌதீக இருப்புக் கணிப்பீட்டின் போது உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | சங்கைக்குரிய பதிவாளர்தேரர்களுக்கு கொடிகள் வழங்கப்பட்டமையால், எஞ்சிய கொடிகள் தொடர்பில் சரியான தகவல்களை பெற்றுக்கொள்ளல் கடினமானது என்பதால் எதிர்காலத்தில் புதிய கட்டுப்பாட்டு சபையொன்றுக்கு அறிவித்து தீர்வொன்றினை பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கின்றேன். | உரிய பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டியமை. |
| (ஆ) | கடந்த வருடங்களில் நிலையான வைப்பு வட்டிக் கணிப்பீட்டின் போது ஏற்பட்டிருந்த ரூபா 83,466 ஆன | கடந்த வருடங்களின் கணக்குகளை தயாரிக்கும் போது நிலையான | வட்டி வருமானம் சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | வழுக்களை திருத்துவதற்கு மீளாய்வாண்டின் வட்டிக் கணக்கின் ஊடாக சீராக்கம் மேற்கொண்ட காரணத்தால் மீளாய்வாண்டின் வட்டி வருமானம் ரூபா 2,091,575 ஆன இருக்க வேண்டிய போதிலும், அது ரூபா 2,008,019 ஆக வருமான மற்றும் செலவினக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்தது. | வைப்புகளுக்காக ஆரம்ப திகதி முதல் ஒரு வருடம் பூர்த்தியாகும் வரையிலும் உரியதாக கொள்ளப்பட்ட போதிலும், இந் நிதிக்கூற்றுக்களுக்காக நிதியாண்டாக சனவரி 01 ஆந் திகதி முதல் திசெம்பர் 31 வரை வட்டிக்கு உரியதாக கொள்ளப்பட வேண்டியமையால், கடந்த வருடங்களில் மாற்றமடைந்த பெறுமதிகள் இந்த வருடத்தின் வட்டிக்கு சீராக்கப்பட்டமையால் இந்த வேறுபாடு நிலவுகின்றது. அதன் பிரகாரம், இந்த நிதிக்கூற்றுக்கள் சரியாக சமர்ப்பிக்கப்படும். | |
| (இ) | கொரோனா தொற்றுநோய் நிலைமை காரணமாக பொருளாதார பிரச்சினைகள் நிலவும் விகாரைகளில் 2020 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட உலர் அட்டைகளின் செலவினமான ரூபா 98,400 இனை மீளளிப்பு செய்வதற்காக கடந்த வருடத்தில் உரிய நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிராமையுடன் மீளாய்வாண்டின் செலவினமொன்றாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டின் இறுதியில், உலர் உணவுகளை வழங்குவதற்காக ரூபா 2,453,380 செலவழிக்கப்பட்டது, மேலும் சரியான முறையில் பட்டியல்களுடன் கோரிக்கைகள் எதுவும் முன்வைக்கப்படாததால், பொதுச் சபையில் பணம் சமர்ப்பிக்கப்பட்டு கொடுப்பனவு நிறுத்தப்பட்டது. ஆனால் 2021 ஆம் ஆண்டில், பிரதேச செயலகங்களில் சரியான பட்டியல்கள் செலுத்தப்பட்டதன் காரணமாக பணம் மீளளிப்பு செய்யப்பட்டது. | செலுத்த வேண்டிய செலவுகள் அட்டுறு செலவுகளாக கணக்கிடப்பட வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

---

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 135 பிரகாரம் நிதியத்தின் நிதிக் கட்டுப்பாடு தொடர்பிலான பணிகளுக்காக அதிகாரக் கையளிப்பு இடம்பெற்றிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 135 இன் பிரகாரம், அதிகாரக் கையளிப்பு தொடர்பில் புதிய கட்டுப்பாட்டு சபைக்கு அறிவித்து தயாரித்து சமர்ப்பிப்பதற்கு குறித்து வைத்துக்கொள்கின்றேன். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு மீளாய்வு ரூபா 1,192,333 ஆன பற்றாக்குறை என்பதுடன் அதற்கு எதிராக முன்னைய வருடத்தின் பற்றாக்குறை ரூபா 2,651,735 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 1,459,402 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. வைப்புகளுக்கான மொத்த வட்டி வருமானத்தின் ரூபா 2,052,328 ஆன குறைவொன்று காண்பித்திருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது சிசு சவிய புலமைப்பரிசிலுக்காக மற்றும் கட்டிட மானியங்களுக்காக நன்கொடை மேற்கொள்ளப்படாமை இந்த அதிகரிப்பிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 இன் 16 ஆம் இலக்க சமஸ்த லங்கா சாசனங்களுக்கான சபை (கூட்டிணைத்தல்) சட்டத்தின் 6 ஆம் பந்தியின் (ஊ) உப பந்தியின் பிரகாரம் நிதியத்தின் நோக்கங்களை செயற்படுத்துவதற்குத் தேவையான அளவு உத்தியோகத்தர் மற்றும் ஊழியர்களை நியமித்தல் மற்றும் சேவையில் ஈடுபடுத்ததுதல் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | புதிய கட்டுப்பாட்டுச் சபைக்கு இது தொடர்பில் விடயங்கள் தெளிவுபடுத்தப்ப்பட்டுள்ளது. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பதவியணியை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | விற்பனைக்காக அறநெறி பாடசாலைகளுக்காக 2019 ஆம் ஆண்டின் போது விநியோகிக்கப்பட்ட கொடிகள் மற்றும் ஸ்டிக்கர்களில் மீதமுள்ள தொகையான ரூபா 6,787,371 ஆன இருப்பு, தஹாம் பாடசாலைகளின் மூலம் விற்பனை செய்யப்பட்டதாக அல்லது எஞ்சியுள்ளதாக என பின் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சங்கைக்குரிய பதிவாளரான தேரர்கள் கொடி விற்பனைப் பணத்தை அவ்வப்போது கணக்கில் செலவு வைப்பதாலும், அதற்கான தகவல்கள் பல மாவட்டங்களில் இருந்து அனுப்பப்படாததாலும், கணக்குகளில் மீதமுள்ள கொடிகள் மற்றும் ஸ்டிக்கர்களின் மதிப்பை சரியாகக் காட்ட முடியாத நிலை உள்ளது. | கொடிகள் மற்றும் ஸ்டிக்கர்கள் வழங்கப்பட்டதற்கும் விற்பனை செய்யப்பட்டதற்கும் தொடர் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | புதுபுன் மாபிய உபகார வீடமைப்பு செயற்திட்டத்தின் கீழ் 2020 ஆம் ஆண்டின் போது அரச வெசக் விழா இடம்பெற்ற கழுத்துறை மாவட்டத்தின் ஒரு சாசனாரக்ஷக சபையின் ஒரு வீட்டிற்கு ரூபா 2 இலட்சம் படியாக வழங்குவதற்கு | புதிய கட்டுப்பாட்டு சபைக்கு இது தொடர்பில அறிவித்திருந்த போதிலும், இரண்டாவது கட்டமாக ரூபா 100,000 படியாக வழங்குவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தமையால் | கொடுப்பனவுகள் தொடர்பில் கட்டுப்பாட்டுச் சபையின் திட்டவட்டமான தீர்மானம் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| உரியதாக அங்கீகரிக்கப்பட்ட முன்மொழிவின் பிரகாரம் கழுத்துறை மாவட்டத்தின் 17 தேரர்களுக்கு மற்றும் கண்டியில் ஒரே குடும்பத்தில் இரு தேரர்கள் சாசனத்திற்கு பங்களிப்பு செய்த பெற்றோருக்கு ரூபா 100,000 படியாக ரூபா 18 இலட்சம் முதலாவது கட்டத்திற்காக 2021 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறான போதிலும், அதற்குரிய இரண்டாவது கட்டமாக ரூபா 100,000 படி செலுத்த வேண்டிய ரூபா 1,800,000 ஆன தொகை செலுத்தல் தொடர்பில் திட்டவட்டமான தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் பொறுப்பொன்றாக காண்பிக்கப்படவில்லை. | |

## 3.2 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 இன் 16 ஆம் இலக்க சமஸ்த லங்கா சாசனங்களுக்கான சபை (கூட்டிணைத்தல்) சட்டத்தின் 3 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக, நிதியத்தின் சேமிப்பு, நடைமுறை மற்றும் நிலையான வைப்புக் கணக்குகளின் ரூபா 52,769,047 ஆன தொகை காணப்பட்ட போதிலும், குறித்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்ட தொகை ரூபா 3,992,400 மாத்திரம் ஆகும். அதன் பிரகாரம், நிதியத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக நிதியத்தினை செயற்திறனாக ஈடுபடுத்தல் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | நாட்டில் நிலவும் மோசமான சுகாதார நிலைமைகள் காரணமாக, நிதியத்தின் நோக்கங்களை அடைய முடியவில்லை. எதிர்காலத்தில் இலக்குகளை அடைய நடவடிக்கை எடுக்க வேண்டும் என குறித்து வைத்துக்கொள்கின்றேன். | நிதியின் நோக்கங்களை அடைய நிதியை திறமையாகப் பயன்படுத்துவதில் கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையுடன் இணைந்து நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த மிஹிந்து நிவான செயற்திட்டத்திற்காக 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கிடைத்திருந்த விண்ணப்பங்களிடையே தகைமை பெற்ற விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை 1097 ஆக காணப்பட்டதுடன், அவற்றுள் நிர்மாணங்களை ஆரம்பித்திருந்த வீடுகளின் எண்ணிக்கை 661 ஆகும். அவ்வாறான | இந்த மிஹிது நிவாஹன வீடமைப்பு செயற்திட்டம் பௌத்த அலுவல்கள் திணைக்கம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டமாகும். | செயற்திட்டங்கள் தொடர்பில் கண்காணிப்பு மற்றும் பின்தொடர்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும், நிர்மாணங்கள் நிறைவு செய்யப்பட்டிருந்த வீடுகளின் எண்ணிக்கை 189 மாத்திரம் என்பது செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது. | | |
| (இ) | நிதியத்தின் பிரதான பணிகளுக்கிடையே விகாரைகளுக்காக கட்டிட நன்கொடைகளை வழங்குவதற்காக மற்றும் தஹாம் பாடசாலை மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்குவதும் 2021 ஆம் ஆண்டில் இடம்பெற்றிராததுடன், செயலாற்றல் குறிகாட்டிகளை இனங்காணல் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை இனங்காணல் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | வடக்கு, கிழக்கு விகாரைகளுக்கான கட்டட உதவி விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படாததாலும், நாட்டில் நிலவும் சுகாதார சீர்கேடு காரணமாகவும் 2020 ஆம் ஆண்டிற்கான தஹாம் பாடசாலை பரீட்சைகள் நடாத்தப்படாமையாலும்,மாணவர் புலமைப்பரிசில் திட்டம் நடைமுறைப்படுத்தப்படாததாலும், எதிர்காலத்தில் அந்த திட்டங்களை செயல்படுத்த செயல்திறன் குறிகாட்டிகள் மற்றும் நிலையான அபிவிருத்தி நோக்கங்களை அடையாளம் காண கட்டுப்பாட்டு சபையின் கவனம் செலுத்துதல் தொடர்பில் நடவடிக்கை எடுக்கின்றேன். | நிதியத்தின் முக்கிய பணிகளை நிறைவேற்றுவது தொடர்பான செயல்திறன் குறிகாட்டிகள் மற்றும் நிலையான அபிவிருத்தி நோக்கங்களை அடையாளம் காண முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(ஏ) பிரிவு மற்றும் 40 ஆம் பந்திகளின் பிரகாரம் ஒவ்வொரு நிறுவனத்திற்காகவும் உள்ளக கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், நிதியம் தொடர்பில் உள்ளக கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 133 மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாச்சட்டத்தின் 38(ஏ) மற்றும் 40 ஆம் பிரிவுகளின் பிரகாரம் உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது மற்றும் புதிய கட்டுப்பாட்டு சபைக்கு அறிவித்திருந்ததுடன், எதிர்காலத்தில் கலந்துரையாடி அதன்படி நடவடிக்கை எடுக்கின்றேன். | தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 15.1 ஆம் பந்தியின் மூலம் உள்ளடக்கப்பட்ட நிதிப் பிரமாணம் 877(1)(இ) பிரிவின் பிரகாரம், நிதியமொன்றின் கட்டுப்பாட்டுச் சபையினால் வருடாந்த பாதீடு நிதியத்தின் நோக்கத்திற்கமைய தயாரிக்கப்பட்டு, திட்டவட்டமான அங்கீகாரத்துடன் செப்தம்பர் 30 ஆந் திகதிக்கு முன்னர் பொது திறைசேரியின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 2022 ஆம் ஆண்டுக்குரியதாக தயாரிக்கப்பட்ட வருடாந்த பாதீடு கௌரவ அமைச்சரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் தேசிய வரவு செலவுத்திட்ட பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. | உரிய ஆண்டின் பாதீட்டை தயாரித்து அங்கீகரிக்க வேண்டும். |